Enrich, X(I) : 5 - 9, July – Dec, 2018

# குடும்ப அறத்தில் பெண்கள்

செ.சிவகாமி சுந்தரி, தமிழாய்வு மையம்,
ரா.ரீட்டா ராஜகுமாரி, முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி தமிழாய்வு மையம், தூத்துக்குடி

**முன்னுரை**

இந்தியத் தமிழ்ப் பண்பாட்டில் குடும்பம் என்பது அடிப்படை அலகாகும். இவ்வமைப்பு இல்லையென்றால் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ‘நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்’ என்பதற்கு ஏற்றவாறு குடும்பத்தைக் கட்டிக் காப்பவள், இல்லறத்தில் உள்ள பெண் ஆவாள். அத்தகைய மாட்சிமை பொருந்திய பெண்ணின் குண நலன்களையும், இல்லறத்தில் செய்ய வேண்டிய அறமாண்பினையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எடுத்தியம்புகின்றன.

**அறநூல்களில் பெண்கள்**

சங்கமருவிய கால இலக்கியங்களில் பெண் அல்லது மனைவி பற்றிய அற ஒழுக்கம் சார்ந்த கருத்துக்கள் அதிகமாகப் போதிக்கப்பட்டன. குடும்பம் என்ற இல்லறத்தில் மனைவியின் அறச் செயல்கள், மனைவாழ்க்கை, கற்புநலம் என அனைத்து மதிப்பீடுகளையும் பெண்ணிற்கான அறங்கள் என்று அறநூல்கள் மொழிகின்றன.

**வாழ்க்கைத் துணை**

குடும்ப அமைப்பில் கணவனுக்கு நிகராக உயர்நிலைமை கொண்டிருப்பது மனைவி என்கிற கட்டமைப்பாகும். மனைவி என்பவள் இல்லறம் என்னும் மரத்துக்கு வேராக விளங்குகின்றவள். அந்த மரம் பூத்துக் காய்த்துக் கனிதரக் காரணமான வேர்போல இல்லறமாகிய மரத்துக்கு வேராகி வாழ்பவள். இல்வாழ்க்கையின் உயிர் பெண்ணாதலின் “பெண் தெய்வத்தை ‘வாழ்க்கைத் துணை’ என்று நம் தமிழ்ப் பெரியோர் கூறினர் என்பார்”[1] திரு.வி.க. இதனை வள்ளுவரும்

**“மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”** (குறள் - 51)

என்றும்,

**“மங்கலம் என்ப,மனைமாட்சி”** (குறள்-60) என்றும் வாழ்க்கைத் துணையின் சிறப்பினைச் சுட்டுகிறார்.

**மனை வாழ்க்கை**

மனையறம் காப்பதைக் கடமையாக மகளிர் மேற்கொண்டனர். இந்நிலையினை,

**“மனைக்கு விளக்காகிய வாள்முதல்”**[2] (புறம் - 314)

என்று புறநானூற்று வரியும் விளக்குகின்றன.

**“மழைதிளைக்கும் மாடம்ஆய்,மாண்பு அமைந்த காப்புஆய்**
**இழைவிளக்கு நின்று இமைப்பின் என்ஆம், விழைதக்க**
**மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்**
**காண்டற்கு அரியது ஓர் காடு”** (நாலடியார் -361)

உயர்மாளிகை, சிறந்தகாவல், ஒளிரும் விளக்கு கொண்ட வீடும் மாட்சிமை இல்லா மனைவியைப் பெறாவிட்டால் காட்டிற்குச் சமமாகும் என்று கூறுகிறது.

இல்லத்தின் அரசியாகத் தலைவி விளங்குகிறாள். குடும்பத்தில் பலர் இருப்பினும் மனைவி முதன்மையானவள் என்னும் முறையில் 'மனைமுதல்' என்றும் பெண்மை நலத்தின் சிறப்பைக் குறிக்கும் நிலையில் 'பெண்டு' என்றும் குறிக்கப்படுகிறாள்.

**"அவள் கற்பு மேம்படுவ"**[3] (அகம் 323)

என்று சிறப்பிக்கப்படுகிறாள்.

**"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு**

**மருவினியவு முளவோ"**[4] (குறுந் - 322 : 5-6)

என்று குறுந்தொகை சுட்டுகிறது.

இல்லறத்தை நல்லறமாக மாற்றக்கூடிய பெண்டிரின் பெருமையை,

**"ஒப்ப முடிந்தால் மனைவாழ்க்கை முன்இனிது"** (இனியவைநாற்பது பா-2) என்று சுட்டுகிறது.

**கற்புடைமை**

'கற்பு' என்பது இல்லறத்தார்க்குரிய ஒரு கட்டுப்பாடாகும். கணவனும் மனைவியும் இல்லறத்தில் ஆன்றோர் வகுத்த நெறியான கட்டுப்பாட்டில் பிறழாது வாழ்ந்து வருவதே கற்பறம் எனப்படும். மகளிர்க்கு மட்டும் கற்பு என்பது அதிகமாக வலியுறுத்தப்பட்டு தெய்வீகத்தன்மை வாய்ந்த உயர்நிலையை இலக்கியங்கள் வழங்குகின்றன.

அத்தகைய கற்பினை,

**"கடவுள் சான்றகற்பின் சேயிழை"**[5] (புறம் - 198 -3)

**"முல்லைசான்ற கற்பு"**[6] (நற்றினை 142 – 10)

**"நன்றிசான்ற கற்பு"**[7] (நற்றினை 330 – 10)

என்று இலக்கியங்கள் பலவாறாகப் பாராட்டுகின்றன.

பெண்மைக்குரிய பல்வேறு பண்புகளில் கற்புடைமை முதன்மையாகக் கருதப்பட்டது என்பதை,

**"உயிரினும் சிறந்தன்று நாணேநாணினும்**

**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"**[8] (தொல் - பொருள் களவு -23)

தொல்காப்பியம் மொழிகிறது. வள்ளுவரும்,

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மை உண்டாகப் பெறின்?"** (குறள் -54)

என்று விளக்குகிறார்.

கற்பின் சிறப்பைக் கூறுமிடத்து,

**"கற்புடையபெண் அமிர்த்து"** (சிறுபஞ்சமூலம் - 4)

**"விளங்கிழைக்கும் கற்பு உடைமை"** (சிறுபஞ்சமூலம் - 31)

**"அருந்ததிக் கற்பினார் தோளும்"** (திரிகடுகம் - 1)

என்று சிறுபஞ்சமூலமும், திரிகடுகமும் எடுத்துரைக்கின்றது.

கற்பு என்பதற்கு,

**"கற்பெனப்படுவது சொல் திறம்பாமை"**[9] (கொன்றைவேந்தன் -14) என்று கூறுகிறது.

கற்பு என்பதற்கு **'பதிவிரதா தருமம்'**[10] (Chastity fidelity)என்று தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி விளக்கம் தருகிறது.

கற்புடைப் பெண்டிர் உலகம் மழையின்றி வறுமையுற்றவிடத்து மழையைப் பெய்விக்கும் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கினர் என்று கற்புத்திறம் புகழப்படுகிறது. இதனை,

**"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்**

**பெய் எனப் பெய்யும் மழை"** (குறள் - 55)

தெய்வங்களைத் தொழாமல் தன் கணவனை வணங்கும் இயல்புடைய பெண், மழை பெய்யட்டும் என்று சொன்ன அளவில் மழை பெய்யும் என வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

**"நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்**

**பீடுறும் மழைபெய்க எனப் பெற்றலும்**

**கடல் ஆற்றவர் நல்லது கூறுங்கால்**

**பாடுசால்மிகு பத்தினிக்கு ஆவதே!"**[11] (வளையாபதி– 7)

பெய்க என்று சொன்ன உடனே மழை பெய்தற்குரிய தெய்வத் தன்மை சிறப்பு மிக்க தலைவிக்கே உண்டு என்பர் சான்றோர் எனக் கூறும் வளையாபதி கருத்தோடு ஒத்துப் போகிறது.

**கணவனே கண்கண்ட தெய்வம்**

கற்புடைய மகளிர் பிற தெய்வங்களைத் தொழுதல் இல்லை. கணவனையே தெய்வமாக மதித்தனர். தன் கணவனை வழிபடுதல் குடும்பப் பெண்ணின் கடமை என்று நாகனார்,

**"அஃதன்றி அணாங்கை வணங்கலாள் பெண்"** (நான்மணிக்கடிகை– 89)

என்கிறார்.

கணவனை தெய்வமாக நினைத்து வாழ்ந்த கற்புடைய மகளிரை,

**"வடமீன் போல் தொழுதேத்தும் வயங்கிய கற்பினாள்"**[12] (கலி 1 – 21)

**"சிறுமீன் புரையுங் கற்பினுதல்"**[13] (பெரும்பாண் - 303)

**"கற்பிறை கொண்ட கமழுஞ்சுடர் நுதல்"**[14] (பதிற் - 70-15)

என்றும் ஆன்றோர் போற்றினர்.

**அறச்செயல்கள்**

கணவரின் வருவாய் அறிந்து செலவு செய்து, தன் சுற்றத்தாரைப் போற்றிக் காத்து, விருந்தோம்பி, தினமும் தெய்வத்தை வழிபட்டு வாழ்வதுதான் சிறந்த பெண்டிரின் சிறப்பியல்புகளாகும். தலைவன் தேடிய பொருளைத் தக்க வகையில் செலவு செய்து அப்பொருளை இல்லறத்திற்கு நற்பயனளிக்குமாறு செய்பவள் மனைவி என்பதை 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்பதலிருந்து உணரலாம். இதனை,

**"வருவாய்க்குத் தக்க, வழக்கு அறிந்து, சுற்றம்**

**வெருவாமை, வீழ் விருந்து ஓம்பி, திருஆக்கும்**

**தெய்வத்தை எஞ்ஞான்றும் தெற்ற வழிபாடு**

**செய்வதே பெண்டிர் சிறப்பு"** (சிறுபஞ்சமூலம் - 41)

என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

கணவன் சொற்படி மனைவி நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதை,

**“கொண்டான் வழி ஒழுகல் பெண்”** (சிறுபஞ்சமூலம் - 13) என்கிறது.

**“ஒருவனைப் பற்றிஓர் அகத்து இரு”**[15] (கொன்றைவேந்தன் - 10)

பெண்ணே! நல்லவன் ஒருவனைக் கைப்பற்றி அவன் வீட்டில் நல்லறம் செய் என்று கொன்றை வேந்தனும் மொழிகிறது.

**“மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்”** (நான்மணிக்கடிகை– 18)

நல்ல பண்புடைய பெண்டிர் இருத்தல் நல்ல வீட்டிற்கு ஆக்கம் என்று நான்மணிக் கடிகை இயம்புகிறது. இதனை,

**“பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு மணிமுடியாவாள்;**

**இழிவு வருவிட்பவள் அவனுக்கு எலும்புருக்கி போலிருப்பாள்”**[16]

(விவிலிய நீதிமொழிகள் 12 : 4)

என்று விவிலியம் பண்புள்ள மனைவியைப் பற்றி இயம்புகிறது.

**விருந்தோம்பல் பண்பில் மகளிர்**

இல்லறத்தில் கணவனும் மனைவியும் இணைந்து ஆற்றவேண்டிய அறம் விருந்தோம்பல் ஆகும். இல்லம் நாடிவரும் உற்றார், உறவினையும், பிறரையும் உண்டியாலும், உறையுளாலும் உபசரித்தல் அவர் தம் கடமை என்று அறநூல்கள் விளக்குகின்றன.

வள்ளுவர்,

**“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு”** (குறள் - 81)

என்கிறார். இக்கருத்து

**“விருந்து இலோர்க்கு இல்லை, பொருந்திய ஒழுக்கம்”**[17](கொன்றைவேந்தன் - 83) என்று கூறும் கொன்றை வேந்தனின் கருத்தோடு ஒத்துப்போகிறது.

தலைவனின் ஒழுகலாறுகள் எங்ஙனம் இருப்பினும் பெண் தன் கடமையைச் செய்து முடிப்பதே அவள் பிறந்து, வாழ்ந்த வீட்டிற்குப் பெருமை ஆகும். இதனை,

**“குடநீர் அட்டுஉண்ணும் இடுக்கண் பொழுதும்**

**கடல்நீர் அறஉண்ணும் கேளிர் வரினும்**

**கடன்நீர்மைகையாறாக் கொள்ளும் மடமொழி**

**மாதர் - மனைமாட்சியாள்”** (நாலடியார் 39,கற்புடைமகளிர் -2) என்று கூறுகிறது.

**“நல்விருந்து ஓம்பலின், நட்டாளாம்”** (திரிகடுகம் - 64) என்று திரிகடுகமும் பெண்ணின் கடமையை மொழிகிறது.

**விருந்தினரை வரவேற்றல்**

தன்னை நோக்கி வரும் விருந்தினரை மலர்ந்த முகத்துடன் வரவேற்று விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்பதை,

**“அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து**

**நல்விருந்து ஓம்புவான் இல்”** (குறள் - 84) என்கிறது.

**“முறுவல் இனிதுரை, கால்நீர், மணை, பாய்**

**கிடக்கையோடு, இவ்ஐந்தும் என்ப–தலைச் சென்றார்க்கு**

**ஊணொடு செய்யும் சிறப்பு”** (ஆசாரக் கோவை : 54)

விருந்தினரை வரவேற்று புன்முறுவலோடு உணவு அளித்து, இனியசொற்கள் பேசி,கால் கழுவ நீரளித்தல், அமர இருக்கை அளித்தல், படுக்கப் பாய் தருதல், தங்க இடம் அளித்தல் ஆகியவற்றையும் செய்தல் வேண்டும் என்கிறது.

முகம் மலர்ந்து அளிக்கும் விருந்து பற்றி விவேகசிந்தாமணியில்,

**“ ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி**

**உப்பிலாக்கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும்”**[18] (விவேகசிந்தாமணி–4)

கூறப்படுகிறது.

**முடிவுரை**

அறத்தொடு சார்ந்த குடும்ப வாழ்க்கையை தமிழர்கள் பின்பற்றினர். குடும்ப அறமான இல்லறத்தில் அறநெறி வளர பெண்கள் மனையறம் பேணுதலைத் தம் கடமையாகக் கொண்டனர்.

இல்லறக் கடமையாற்றும் அறக்கொள்கை உடையவளாகப் பெண் திகழ்ந்தாள். பெண் என்பவள் கற்பறம் பேணும் கடமையுடையளாக விளங்கினாள். பெண்ணின் கற்பு உயர்வாக மதிக்கப் பெற்றது. இல்லறத்தில் விருந்தோம்பல் சிறந்த அறமாக மேற்கொள்ளப்பட்டது. தம்மிடம் உள்ளதைப் பகுத்துண்டு ஓம்பும் நெறிஉயர்வாக மதிக்கப் பெற்றது.

இல்லற வாழ்வை மேற்கொள்ளும் பெண் அறத்துடன் வாழ்வது, கணவனே தெய்வம் என்றிருந்து, அறச் செயல்கள் செய்வதை மதித்து வாழ்ந்தாள் என்பதை பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அறநூல்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. திரு.வி.க.,பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, பக்.354
2. புலியூர்க்கேசிகன், புறநானூறு,பக். 304
3. இரா. செயபால், அகநானூறு,பக். 953
4. வெ. பாலசுப்பிரமணியன், குறுந்தொகை,பக்.
5. புலியூர்க்கேசிகன், புறநானூறு,பக். 208
6. வெ.பாலசுப்பிரமணியன், நற்றிணை,பக். 261
7. மே.நூ பக். 609
8. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் பொருளியல்,பக். 27
9. ந.மு.வெங்கடசாமிநாட்டார், கொன்றைவேந்தன்,பக். 14
10. இராமகிருஷ்ணன், பொன்மணி, அடோன் தமிழ்-தமிழ்-ஆங்கிலஅகராதி, பக்.169
11. ஜெ. ஸ்ரீசந்திரன், வளையாபதி,பக். 469
12. அ. விசுவநாதன், கலித்தொகை,பக். 7
13. இரா.மோகன், பத்துப்பாட்டு,பக். 216
14. அ. ஆலிஸ், பதிற்றுப்பத்து,பக். 244
15. ந.மு.வேங்கடசாமிநாட்டார், கொன்றைவேந்தன்,பக். 13
16. திருவிவிலியம், நீதிமொழிகள், பக். 952
17. ந.மு. வேங்கடசாமிநாட்டார், கொன்றை வேந்தன்,பக். 27
18. ஞா. மாணிக்கவாசகன், விவேகசிந்தாமணி. பக். 3